**11.09.2025**

**MCOP.219/2023**

**எ.ம.சா.1. மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

விபத்து எப்போது நடந்தது என்றால் 25.01.2017–ல் ஈசிஆர் ரோட்டில் உள்ள சிங்களாந்தி குறுக்கு ரோடு அருகில் நடந்தது. சம்பவ சமயத்தில் நான் எப்படி சென்றேன் என்றால் TVS 50 இருசக்கர வாகனத்தில் சென்றேன். எனக்கு சொந்தமான TVS 50 இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து என்னுடைய அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சம்பவ சமயத்தில் ஈசிஆர் சாலையில் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி சென்றேன் என்றால் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இடதுபுறமாக வந்து கொண்டிருந்தபோது நான் வலது புறமாக திருப்புவதற்காக 15 மீ துாரத்தில் சென்று கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் ஓட்டி என் மீது மோதி எனக்கு காயம் ஏற்பட்டது. இந்த விபத்தானது என்னுடைய கவனக்குறைவாலும், நான் வலதுபுறமாக திருப்புவதற்கு முன்பாக எந்த வித செய்கையும் காட்டாமலும், எனக்கு பின்னால் வரும் வாகனத்தை பார்க்காமல் சாலையை கடக்க முயன்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து நடந்த இடமானது அதிக போக்குவரத்து நெரிசல் இல்லாத பகுதி என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ

நாளில் இடதுபுறமாக சென்று கொண்டிருந்தபோது எனக்கு பின்னால் வந்த வாகனம் என்னை இடிக்க வேண்டியது அவசியம் இல்லை என்றும், என்னுடைய கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மனுதாரரை அழைத்து சமாதானம் பேசியது உண்மையா என்றால் சரிதான். என் மீது தவறு இருந்ததால் தான் மனுதாரரை அழைத்து சமாதானம் பேசினேன் என்று சொன்னால் சாட்சி மீண்டும் சமாதானம் பேசவில்லை என சாட்சியம் அளிக்கிறார். என்னிடம் காட்டப்படும் எ.ம.சா.ஆ.1 ஆவணத்தை என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி காவல் துறை ஆய்வாளர் இந்த ஆவணத்தை தயார் செய்து எனக்கு கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் பாதிக்கப்பட்ட மனுதாரருக்கு இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:–இல்லை.**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.